**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**ST.C. No. 220/2026**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 7 | | Additional witness Examined as : PW 3 | |
| Name | : சுப்ரமணியன் | Defence | : |
| Father Name | : ராமசாமி | Court | : |
| Village | : சிறப்பு உதவி ஆய்வாளர், பொறையார் காவல் நிலையம் | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 54/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 26.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. (BNSS பிரிவு 355ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பொறையார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.05.2024 ஆம் தேதி 20.30 மணியளவில் பொறையார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது அருணாச்சலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய மனு எண். 309/2024 என பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் கடந்த 22.05.2024 அன்று மதியம் 14.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.140/2024, இதச பிரிவுகள்

294(b), 341, 427, 506(i) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் சரவணன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரிகள் குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரிகளை தேடியபோது எதிரிகள் பொயைார் காவல் நிலையம் முன்பு நின்றுகொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி 14.12.2025ஆம் தேதி 10.50 மணிக்கு கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கபட்டார்

4. பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து 14.12.2025 இதச பிரிவுகள் 294(b), 341, 427, 506(i) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.